யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2015
## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | இந்து சமயம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

➢ ***01 முதல் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அவ்விலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.***

01) (1) மங்கல வாசகம் (2) மெய்க்கீர்த்திகள்
(3) கல்வெட்டின் காலம் (4) கல்வெட்டின் நோக்கம்
(5) ஓம்படைக்கிழவி

02) (1) ஆயுர்வேதம் (2) சங்கிதை (3) ஆரணியகம்
(4) பிராமணங்கள் (5) உபநிடதம்

03) (1) தாண்டயப் பிராமணம் (2) தலவகாரப் பிராமணம்
(3) சதபதப் பிராமணம் (4) சாமவிதானப் பிராமணம்
(5) சந்தோக்கிய பிராமணம்

04) (1) சிரவணம் (2) பக்தி (3) ஞானம்
(4) மனனம் (5) நிதித்தியாசனம்

05) (1) காசாகஸ்தி (2) சிதம்பரம் (3) திருப்பதி
(4) திருவரங்கம் (5) கடலூர்

➢ ***06 முதல் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடிச் சொல்லை இனங்கண்டு அவ்விலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.***

06) (1) இருக்குவேதம் - யமசூக்தம்
(2) சுக்கில யசுர் - தலவகாரப் பிராமணம்
(3) கிருஷ்ணயசுர் - தைத்திரியப் பிராமணம்
(4) விஷ்ணுப்பரத்துவம் - பாகவதபுராண அவதாரம்
(5) சிவபரத்துவம் - அடிமுடி தேடிய கதை

07) (1) சிம்மவிஷ்ணு - மகேந்திரவர்மன்
(2) மகேந்திர வர்மன் - நரசிம்மவர்மன்
(3) இராஜராஜன் - இராஜேந்திரன்
(4) விஜயாலயன் - பராந்தகன்
(5) ஆதித்தன் - குலோத்துங்கன்

08) (1) மகேந்திரவர்மன் - விசித்திரசித்தன்
(2) சிம்மவர்மன் - ஐயடிகள் காடவர்கோன்
(3) நரசிம்மவர்மன் - மாமல்லன்
(4) பரமேசுவரவர்மன் - வித்யாவிநீதன்
(5) இராசசிம்மன் - வியத்தகு திறந்தோன்

09) (1) பல்லவ மன்னர்கள் - நந்திச் சின்னம்
(2) சோழ அரசர் - நடராச சின்னம்
(3) பாண்டியர் - கருடச் சின்னம்
(4) சேர மன்னர்கள் - வில் சின்னம்
(5) குப்த மன்னர் - லக்சுமி சின்னம்

10) (1) ஐயடிகள் காடவர்கோன் - ஷேத்திரவெண்பா
(2) சானாவதிம்மர் - கிருஷ்ண சந்தம்
(3) கிருஷ்ணதேவராயர் - ஆமுக்தமால்யதா
(4) வித்யாரண்யர் - விஷ்ணுசித்தீயம்
(5) சிவஞானமுனிவர் - சிவஞானபாடியம்

➢ **11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களில் 'அ' 'ஆ' என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ளவை 'ஆ' நிரலில் உள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் பொருத்தமுடையவை. 'அ' நிரலில் உள்ளவற்றுடன் பொருத்தமாக ஒழுங்குபடுத்தும் போது ஐந்து சேர்மானங்களில் ஒன்று சரியானதாக அமையும். அதனைத் தெரிவு செய்து விடைத்தாளில்** குறிப்பிடுக.

11)

| | 'அ' | | | 'ஆ' |
|---|---|---|---|---|
| (i) | சிவஞானபோதம் | A | - | தர்மசாஸ்திரங்கள் |
| (ii) | இராமாயணம் | B | - | திருமூலர் |
| (iii) | வியாபார காண்டம் | C | - | மெய்கண்டதேரர் |
| (iv) | திருமந்திரம் | D | - | காரைக்காலம்மையார் |
| (v) | அற்புதத்திருவந்தாதி | E | - | வான்மீகி |

(1) CEABD (2) ECBDA (3) CBEAD (4) DBACE (5) ACBDE

12)

| | 'அ' | | | 'ஆ' |
|---|---|---|---|---|
| (i) | வருணன் | A | - | அக்கினி |
| (ii) | சிவஞானசித்தியார் | B | - | ரிதஷயகோபா |
| (iii) | திருத்தொண்டர்தொகை | C | - | அபிராமி அந்தாதி |
| (iv) | தேவதூதன் | D | - | சுந்தரர் |
| (v) | அபிராமிப்பட்டர் | E | - | அருணந்தி சிவாச்சாரியார் |

(1) CBADE (2) BEDAC (3) EDCBA (4) DEBCA (5) ACBED

13)

| | 'அ' | | | 'ஆ' |
|---|---|---|---|---|
| (i) | திருப்புகழ் | A | - | சதருத்திரியம் |
| (ii) | சாந்திபர்வம் | B | - | அந்தணன் |
| (iii) | வேட்டல் | C | - | உமாபதி சிவாச்சாரியார் |
| (iv) | சுக்கிலயசுர் | D | - | அருணகிரிநாதர் |
| (v) | திருவருட்பயன் | E | - | மகாபாரதம் |

(1) DECBA (2) CEDBA (3) DEBAC (4) BACDE (5) ACDEB

14) ‘அ’ ‘ஆ’

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | இராஜராஜன் | A | - | குடைவரைக்கோயில் |
| (ii) | மகேந்திரவர்மன் | B | - | விஷ்ணுசித்தீயம் |
| (iii) | கிருஷ்ண தேவராஜர் | C | - | தஞ்சை பெருவுடையார் |
| (iv) | சமுத்திரகுப்தன் | D | - | கங்கை கொண்ட சோழேஸ்வரம் |
| (v) | இராஜேந்திரன் | E | - | அசுவமேதயாகம் |

(1) BACDE (2) EDCBA (3) DECBA (4) CABED (5) ACBDE

15) ‘அ’ ‘ஆ’

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | அந்தணர் | A | - | மகவான் |
| (ii) | சேக்கிழார் | B | - | நாயக்கர்காலம் |
| (iii) | இந்திரன் | C | - | பெரியபுராணம் |
| (iv) | இராஜகோபுரம் | D | - | சகலகலாவல்லிமாலை |
| (v) | குமரகுருபரர் | E | - | வேட்டல் |

(1) BACDE (2) EDCBA (3) CBADB (4) BCADE (5) ECABD

➢ **16 தொடக்கம் 20 வரையான ஒவ்வொரு வினாக்களுக்கும் ஐந்து கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றோடு பொருந்தாது. அவ்வாறு பொருந்தாததை இனங்கண்டு அவ்விலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

16) (1) கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் காணபத்தியமாகும்.
(2) மகாபாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல விநாயகர் எழுதினார்.
(3) ஐயடிகள் காடவர் கோன் என்னும் பக்தர் திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலையைப் பாடியுள்ளார்.
(4) கணபதியின் உடலில் எல்லாத் தெய்வங்களும் இருக்கின்றனர்.
(5) கணபதி தனக்கு மேல் தலைவன் இல்லாதவர் ஆதலால் விநாயகர் என்ற பெயரைப் பெறுகின்றார்.

17) (1) சித்தத்தை இறை ஞானத்தில் வைத்து வழிபாடு செய்தவர்கள் சித்தர்களாவர்.
(2) ஆன்மார்த்த வழிபாட்டை சித்தர்கள் அறிமுகம் செய்தவர்கள்.
(3) பாம்பாட்டிச் சித்தர் ஈழத்துச் சித்தர்களின் குறிப்பிடத்தக்கவர் எனலாம்.
(4) திருமூலர் திருமந்திரம் ஒரு சாதனை நூலாகும்.
(5) சைவ தத்துவத்தின் முதன் நூல்களைத் தெளிவாக அடையாளம் காட்டிய பெருமைக்குரிய நூல் திருமந்திரமாகும்.

18) (1) இதிகாசங்களில் ஒன்றான இராமாயணம் வான்மீகியால் எழுதப்பட்டது.
(2) இதனை தமிழில் துளசிதாசர் எழுதினார்
(3) இராமபிரானை காவியத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது.
(4) இராமாயணம் 24,000 சுலோகங்களை உடையது.
(5) ஏழு கண்டங்களை உடையது.

19) (1) பல்லவர் கால கட்டடக்கலை வளர்ச்சியின் ஆரம்ப கட்டமாக அமைவது குடைவரைக் கோயில்களாகும்.
(2) குகைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட குடைவரைக் கோயிலை ஆரம்பித்து வைத்தவர் நரசிம்மவர்மன் ஆவார்.
(3) இக்குடைவரைகளில் உள்ள கருவறைகளில் இறை வடிவங்களைக் காணமுடியவில்லை.
(4) இறைவடிவங்கள் சுதை அல்லது மரத்தால் அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுவர்.
(5) மண்டகப்பட்டு, மாமண்டூர், வல்லம்

20) (1) சிவன் கோயில்கள் எல்லாவற்றிலும் நடராஜா வடிவம் நிறுவப்படும்.
(2) நடராஜர் வடிவம் சிற்ப, விக்கிரகக் கலைகளுடன் தொடர்புபட்டது.
(3) இலங்கையில் பொலநறுவையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட நடராசா வடிவம் சிறப்பானது.
(4) சிதம்பரத்தில் கணபதி முதன்மை பெறுகின்றார்.
(5) நடராஜ மூர்த்தம் மார்கழித் திருவாதிரையுடன் தொடர்புடையது.

➢ **21 - 50 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

21) வேதகால கவிகளைப் பற்றிய விபரங்களைக் கூறும் நூல்
(1) அநுக்கிரமணி (2) பிரைஷசூக்தம் (3) ஆக்யான சூக்தங்கள்
(4) சம்வாத சூக்தம் (5) சுபர்ணா சூக்தம்

22) வேள்விக் கிரியைகளுக்குரிய விதிகளைக் கூறும் இலக்கியம்
(1) சங்கிதை (2) பிராமணம் (3) உபநிடதம்
(4) இராமாயணம் (5) மகாபாரதம்

23) சிரௌதம், சுபதந்திரம் என சிறப்பிக்கப்படும் இலக்கியம்
(1) வேதம் (2) ஆகமம் (3) சங்கிதை
(4) பிராமணம் (5) உபநிடதம்

24) கல்வெட்டுக்களில் உள்ள ''ஸ்வஸ்தி ஸ்ரீ'' என்பது குறிக்கும் பொருள்
(1) கீர்த்தி உண்டாகுக (2) நீடூழி வாழ்க (3) மங்களமுண்டாகுக
(4) இன்பம் பொங்குக (5) ஆனந்தம் பெருகுக

25) பிற்காலத்தில் வலுப்பெற்ற நால்வகை வருணக் கட்டமைப்பின் தொடக்கத்தை கொண்டுள்ள இருக்குவேதப் பாடல் தொகுதி
(1) புருஷசூக்தம் (2) பிரமச்சரியசூக்தம் (3) ஜமசூக்தம்
(4) வருணசூக்தம் (5) நாஸதீயசூக்தம்

26) சாக்த ஆகமங்களில் ஒன்றாகக் கருதப்படுவது
(1) காமிகம் (2) வைகாசனம் (3) குமாரதந்திரம்
(4) ஈஸ்வர சங்கிதை (5) மகா நிருவாணதந்திரம்

27) ''இவ்வுலகம் எதனால் தோன்றி, எதனால் இயங்கி, எதில் ஒடுங்குகின்றதோ அதுவே 'பிம்மம்' எனக் கூறும் உபநிடதம்
(1) சாந்தோக்கிய உபநிடதம் (2) பிரசன உபநிடதம்
(3) முண்டக உபநிடதம் (4) பிரகதாரணிய உபநிடதம்
(5) ஈசாவாக்கிய உபநிடதம்

28) இந்துசமய நெறியை அடிப்படையாகக் கொண்ட இலக்கியம்
(1) இராமாயணம் (2) மகாபாரதம் (3) திருக்குறள்
(4) பெரிய பராணம் (5) சிலப்பதிகாரம்

29) வைணவ ஆலயங்களுக்கு சொந்தமான நிலங்கள்
(1) தேவதானம் (2) சதுர்வேதி மங்கலம் (3) திருவிடையாட்டம்
(4) கிருஷ்ண மங்கலம் (5) திருமுக்கூடல்

30) தணிகைப் புராணத்தின் ஆசிரியர்
(1) கச்சியப்ப முனிவர் (2) சிவஞானமுனிவர் (3) நமச்சிவாயமூர்த்திகள்
(4) கிருஷ்ணமங்கலம் (5) கிருஷ்ணதேவராயர்

31) ஸ்ரீசடகோபர் என்னும் பிள்ளைத் திருநாமத்தையுடைய ஆழ்வார்
(1) பூதத்தாழ்வார் (2) பெரியாழ்வார் (3) ஆண்டாள்
(4) திருப்பாணாழ்வார் (5) நம்மாழ்வார்

32) "முத்தியானந்தர்" என்னும் தீட்சா நாமம் கொண்ட சித்தர்
(1) யோகர்சுவாமி (2) செல்லப்பாசுவாமி (3) நவநாதசித்தர்
(4) கடையிற்சுவாமிகள் (5) சித்தானைக்குட்டி

33) பல்லவர் காலக் கட்டடக் கலையின் மிக முதிர்ச்சி பெற்ற படைப்பு எனக் கருதப்படுவது
(1) மாமல்லபுரக் கடற்கரைக் கோயில்
(2) காஞ்சிபுரத்திலுள்ள வைகுந்தப் பெருமான் கோயில்
(3) ஈஸ்வரன் கோயில்
(4) முகுந்தன் கோயில்
(5) பனைமலைக் கோயில்

34) குடக்கூத்து என்ற கலை பற்றிக் கூறும் இலக்கியம்
(1) திருக்குறள் (2) மகாபாரதம் (3) சிலப்பதிகாரம்
(4) மணிமேகலை (5) இராமாயணம்

35) இராஜேந்திரன் காலத்தில் புகழ்பெற்ற பண்டித சோழேஸ்வரம் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு
(1) மெடிரிகிரியா கல்வெட்டு (2) குருநாகல் கல்வெட்டு
(3) நிலாவெளிச்சாசனம் (4) மிகிந்தலைக் கல்வெட்டு
(5) பதவியாக் கல்வெட்டு

36) சாங்கிய சூத்திரத்தை எழுதியவர்
(1) கணாதர் (2) பிரசத்தபாதர் (3) உதயணர்
(4) கபிலர் (5) சிறிகரர்

37) சாங்கிய தரிசனம் ஏற்றுக் கொள்ளும் பிரகிருதி தத்துவங்களின் எண்ணிக்கை
(1) 23 (2) 22 (3) 25
(4) 27 (5) 24

38) அட்டாங்க யோகத்தில் மன அடக்கம், குறித்த விடயத்தில் மனதை பதித்தல் ஆகிய பயிற்சிகள் இடம்பெறும் நிலை
(1) தியானம் (2) தாரணை (3) பிரத்தியாகாரம்
(4) பிரணாயாமம் (5) ஆசனம்

39) சமவாயம் என்பது குறிக்கும் விடயமாக அமைவது
(1) பிரிபடக்கூடியது (2) காரணகாரியத் தொடர்பு
(3) விலகியிருப்பது (4) பிரிக்க முடியாத தொடர்பு
(5) பிறிதொன்றாக இல்லாதிருத்தல்

40) வைசேடிகதரிசனத்தை ஸ்தாபித்த ஸ்தாபகராக குறிப்பிடப்படுபவர்
(1) பிரசத்தபாதர் (2) உதயணர் (3) கணாதர்
(4) சிறிகரர் (5) கபிலர்

41) ஆரியாசதகம் என்ற நூலை எழுதியவர்
(1) சங்கரர் (2) கோவிந்தர் (3) கௌடபாதர்
(4) இராமானுஜர் (5) மத்துவர்

42) ஒரு பொருள் இன்னொன்றாக மாறாதிருந்தபடியே மாறி விட்டதாகத் தோன்றுவது

(1) பிரதிவிம்பவாதம் (2) அவச்சேதவாதம் (3) விவர்த்தவாதம்

(4) பரிணாமவாதம் (5) ஆவரணம்

43) வீடு பேறடையத் தகுதியுடையவர் முக்தி யோக்யர்கள் என்ற கருத்தை முன்வைத்த தத்துவ வாதி

(1) சங்கரர் (2) கோவிந்தர் (3) இராமானுஜர்

(4) கௌடபாதர் (5) மத்துவர்

44) என்றுமுள்ள எக்காலத்தும் ஒரே தன்மையாயிருக்கும் பொருள் சத்து இதனுள் அடங்கும் இறைவனின் எண் குணங்களில் ஒன்று

(1) தன்வயத்தனாதல்

(2) தூய உடம்பினனாதல்

(3) இயல்பாகவே பாசாங்களினின்றும் நீங்குதல்

(4) முற்றுமுணர்தல்

(5) பேரருளுடமை

45) ஆவணத்துக்குள்ள எட்டுக் குணங்களில் எப்போதும் துக்கப்படல் எனப் பொருள் தரும் குணம்

(1) நகை (2) அஞர் (3) மதம்

(4) கொலை (5) மோகம்

46) மகோற்சவத்தின் போது நடைபெறும் மௌனோற்சவம் எனும் கிரியை உணர்த்தும் ஐந்தொழில் தத்துவம்

(1) படைத்தல் (2) காத்தல் (3) அழித்தல்

(4) மறைத்தல் (5) அருளல்

47) கஜபாகு மன்னன் முதன்முதலாக கண்ணகிக்கு கோயில் கட்டிய இடமாகக் கருதப்படுவது

(1) சுருவில் (2) முல்லைத்தீவு (3) அங்கநாமக கடவை

(4) பருத்தித்துறை (5) மட்டுவில்

48) மாசிமாத கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி திதியில் அனுட்டிக்கப்படும் விரதம்

(1) சக்தி விரதம் (2) விநாயகர் விதம் (3) முருக விரதம்

(4) சிவ விரதம் (5) விஷ்ணு விரதம்

49) “அனைவரிலும் தெய்வீகம் உண்டு அனைவரையும் நேசி அனைவரிடத்தும் அன்பாயிரு” எனும் உயர் மனித நேயத்தை போதிக்கும் இலக்கியம்

(1) வேதம் (2) ஆகமம் (3) புராணம்

(4) இதிகாசம் (5) உபநிடதம்

50) உயிரினங்களின் பொருட்டுச் செய்யப்படும் வழிபாடு, குறிப்பாக வீட்டில் உள்ள உயிரினங்களின் பொருட்டுச் செய்யப்படுவது

(1) பூதயக்ஞம் (2) பிரமயக்ஞம் (3) தேவயக்ஞம்

(4) பிதிர்யக்ஞம் (5) மானிடயக்ஞம்